# செயலட்டை - தமிழ் (06)

## பிரமி கல்வி நிலையம்

S. மோகன் 0779685514

மாணவர் பெயர் : ......................................

- **வெற்றிடங்களுக்குப் பொருத்தமான மரபுச் சொற்களை எழுதுக.**

1. குரங்கிற்கு கடுவன் போல மானுக்கு : ...........................................
2. சிங்கம் கர்ச்சிக்கும் என்பது போல நரி : ...........................................
3. வாழைக்குக் குட்டி போல பனைக்கு : ...........................................
4. பசுவுக்குக் கன்று போல மீனுக்கு : ...........................................
5. பலாவுக்குச் சுளை போல மாம்பழத்திற்கு : ...........................................

- **பின்வரும் வாக்கியங்களில் வந்துள்ள இணைமொழிகளை எழுதுக.**

01) விலங்குகள் ஒன்றோடொன்று முட்டிமோதிக் கொண்டன :

.......................................................................................................................................

02) பாஸ்ட்டர் கல்விகேள்விகளில் சிறந்து விளங்கினார் :

.......................................................................................................................................

03) பூங்காவில் நாங்கள் ஓடியாடித் திரிந்தோம். :

.......................................................................................................................................

04) கல்வி ஈடு இணைச் செல்வமாகும் :

.......................................................................................................................................

05) நாம் சுத்தமாக வாழ்ந்தால் நோய் நொடிகள் எம்மை அணுகாது :

.......................................................................................................................................

06) நோயால் பீடிக்கப்பட்டவன் எலும்புந் தோலுமாகக் காட்சியளித்தான் :

.......................................................................................................................................

07) பெற்றார் பிள்ளைகளைக் கண்ணுங்கருத்துமாக வளர்த்து வந்தனர்.

.......................................................................................................................................

- **தொடக்கத்தில் தரப்பட்ட சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01) விருப்பம் : ஆசை, நட்பு, கருணை, வெறுப்பு

02) அண்மை : நன்மை, அருகு, சேய்மை, சமீபம்

03) கோபம் : சினம், பாவம், சாந்தம், வேகம்

04) புராதனம் : நவீனம், தொன்மை, அறிவீனம், அதிசயம்

05) சண்டை : சீற்றம், அமளி, கோபம், சமாதானம்

06) விண் : மண், விசும்பு, உயரம், தூரம்

07) விரைவு : வேகம், தாமதம், உற்சாகம், தளர்ச்சி

08) சுறுசுறுப்பு : சோம்பல், முயற்சி, சுகம், வணக்கம்

09) பிறர் : மாற்றான், பகைவன், சிலர், தமர்

10) நினைவு : மறதி, ஞாபகம், எண்ணம், நினைப்பு

- **எதிர்பாற் சொற்களை எழுதுக.**

1. வீரன் : ..............................................................
2. குறத்தி : ..............................................................
3. சீமான் : ..............................................................
4. மருத்துவன் : ..............................................................
5. புதல்வி : ..............................................................

- **பின்வரும் சொற்களைப் பன்மைச் சொற்களாக மாற்றி எழுதுக.**

01) மேகம் : .............................................

02) பூங்கா : .............................................

03) சிரித்தேன் : .............................................

04) சொல் : .............................................

*05)* முள் : .............................................

- **சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ் கோடிடுக.**

01) இளனி, இளநீர், இளனீர்

02) கத்திரிக்கோல், கத்தரிக்கோல், கத்தறிக்கோல்

03) பாவக்காய், பாகட்காய், பாகற்காய்

04) வெட்கம், வெக்கம், வெட்க்கம்

*05)* தொழிலாளி, தொளிலாளி, தொலிலாழி

- **கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.**

01) தன் நாட்டை நேசிப்பவன் : ......................................

02) ஒருவருக்கும் தீங்கு அல்லது இம்சை செய்யாமை : ......................................

03) வீண் செலவு செய்பவன் : ......................................

04) நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை : ......................................

05) நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன் : ......................................

06) ஒன்று போல் இருக்கும் மற்றொன்று : ......................................

07) எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன் : …………………………..

S.MOHAN

08) புதிதாகச் செய்த கப்பல், தேர் என்பவற்றை முதன் முதலாகச் செலுத்திப் பார்த்தல் : ......................

09) அறிஞர்கள் வாதிடும் களம் : ......................

10) பத்து ஆண்டுகளை குறிப்பது : ......................

11) ஐம்பதாவது ஆண்டு இறுதியில் எடுக்கப்படும் விழா : ......................

12) இலை, தழை கொண்டு வேயப்பட்ட குடிசை : ......................

13) ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை : ......................

14) ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தோன் : ......................

15) வைத்தியரின்றி தாமே தமது நோய்க்கு செய்து கொள்ளும் மருந்து. : ......................

16) அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா : ......................

17) முனிவர்கள் வாழுமிடம் : ......................

18) மற்றவர்களைப் பற்றி அக்கறையில்லாதவன் : ......................

19) ஒருவர்/ஒரு பொருள் தானே தன் கதையைக் கூறுவது : ......................

20) அகர வரிசைப்படி சொற்களுக்குப் பொருள் கூறும் நூல் : . ....................

21) சிறைத் தண்டனை பெற்றவன் : ......................

- **வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

01) புனிதம், தூய்மை, களங்கம்

02) ஏர், இரதம், கலப்பை

03) சினம், கோபம், சாந்தம்

04) தொன்மை, புராதனம், நவீனம்

05) இன்னல், துன்பம், உவகை

- **பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

01) உப்பிட்டவரை ..........................................................................................

02) கடவுளை நம்பினோர் ........................................................................

03) ........................................................................................ அம்பலம் ஏறாது.

04) கேள்விச் செவியன் ...........................................................................

05) பொறுத்தார் ........................................................................................

06) ..................................................................................... பெருந்தரித்திரம்.

07) தொட்டிற் பழக்கம் ............................................................................

08) போதுமென்ற மனமே ..............................................................................

09) .............................................................................................. சொற்கேளாது

10) சீரைத் தேடின் .....................................................................................

- **பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.**

01) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

..........................................................................................................................................

02) அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

..........................................................................................................................................

03) விளையும் பயிரை முளையில் தெரியும்.

..........................................................................................................................................

04) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

..........................................................................................................................................

05) ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு

................................................................................................................................................

- **பழமொழிகளின் உட்கருத்தைத் தெரிவு செய்து இணைக்குக.**

| | |
|---|---|
| 01) இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை | (அ) முன்மாதிரி |
| 02) இக்கரைமாட்டுக்கு அக்கரைப்பச்சை | (ஆ) நற்புகழ் மங்குவதில்லை |
| 03) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி | (இ) தருமம் செய் |
| 04) எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு. | (ஈ) திருப்தியற்ற மனம் |
| *05)* குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது | (உ) வீண் பெருமை |

S. MOHAN